தெரிவித்து இருக்கிறோம். ஆகவே அவர்களும் அதற்கான ஒப்புதலைத் தந்துவிடுவார்களேயானால் இது அமுலுக்கு வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவரவர்களே, கல்லூரிகளில் உடற் பயிற்சி ஆசிரியர் பதவிக்கு எம்.ஏ., பி.எட். பட்டம் படித்தவர்களைத் தான் நியமிக்கிறார்கள். ஆகவே, டீ.பி.எட், படித்தவர்களுக்கு உயர்நிலைப்பள்ளியிலும் இடம் கிடைப்பதில்லை. கல்லூரிகளிலும் இடம் கிடைப்பதில்லை. இந்த நிலைமையிலே அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுயாட்சி பெற்ற கல்லூரிகள்.

* வினா எண் 503— திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளுக்கு சுயாட்சி முறை வழங்குவது எந்த அடிப்படையில் ?

(ஆ) சுயாட்சி பெற்ற கல்லூரிகளுக்கு அரசு விசேஷ உதவி ஏதும் செய்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் நிலைபெற்று பல்கலைக் கழகத்துடன் நிரந்தரமான இணைப்பு பெற்ற ஒரு கல்லூரி பல்கலைகழக நாட்குறிப்பேட்டின் இருபத்தாறாம் அத்தியாயம் 9 (எ) விதியின்படி குறிப்பிட்ட பாட வகுப்புக்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கப்பட தகுதியுடையதாகிறது.

(ஆ) தன்னாட்சியுரிமை பெற்ற கல்லூரிகளுக்குத் தமிழ்நாடு அரசு சிறப்பாக எந்த விதமான மானியக் கொடையையும் வழங்கவில்லை.

கதர், கைத்தறித் துணிகள் விற்பனை.

*வினா எண் 504— திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). 1980–81–ம் நிதியாண்டில் எவ்வளவு கதர் துணிகள் மற்றும் கைத்தறித்துணிகள் விற்கப்பட்டன ?

1982 மார்ச் 15]

(ஆ). அவைகளுக்கு மத்திய அரசு மற்றும மாநில அரசு வழங்கிய ரிபேட் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ). 1980–81–ம் ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்–டெக்ஸ் மூலம் விற்பனை செய்யப்பட்ட கைத்தறித் துணியின் மதிப்பு ரூ.7,541.00 இலட்சம் ஆகும். இதே ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட கதர் துணிகளின் மதிப்பு ரூ. 692.62 இலட்சம் ஆகும்.

(ஆ). கைத்தறித் துணிக்குத் தள்ளுபடித் தொகையாக மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்கு முறையே ரூ. 298.94 இலட்சம் மற்றும் ரூ. 139.86 இலட்சம் ஆகும். கதர் துணிக்கு காதி கமிஷன் ரூ. 84.41 இலட்சமும், மாநில அரசு ரூ. 30.94 இலட்சமும் தள்ளுபடி தொகையாக வழங்கியுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி மற்றும் கதர் துணிகளின் விலையினை நிர்ணயிப்பது யார் ? மானியத் தொகையினை எந்த விகிதத்தில் கொடுக்கிறார்கள் என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டில், 20-வது அகில இந்திய கைத்தறி விழாவினையொட்டி 30 தினங்களுக்கு, 20 சதவீதம் தள்ளுபடியை மாநில அரசு கொடுத்தது. அதில் தீபாவளிக்கு 20 நாட்களும், பொங்கல் பண்டிகையின்போது 10 நாட்களும் என்ற வகையில் மாநில அரசு 10 சதவீதமும், மைய அரசு 10 சதவீதமும், சிறப்புத் தள்ளுபடிக்கு அனுமதித்துள்ளது. மேலும் கல்கத்தா, பம்பாய், லக்னோ போன்ற இடங்களில் நடைபெற்ற கைத்தறிப் பொருட்காட்சிகளின்போது மேற்கொள்ளப்பட்ட விற்பனைகளுக்கும் மைய அரசு 20 சதவீத தள்ளுபடியை அனுமதித்துள்ளது. அரசு தள்ளுபடி அனுமதிக்கப்பட்ட காலத்தில் விற்பனை செய்யப்பட்ட கைத்தறித் துணிகள் மட்டும் 4,644.89 லட்சம் ஆகும். ஆகவே இந்தத் தள்ளுபடியை மாநில அரசு, மைய அரசு ஆகிய இரண்டுமே தருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய துயரைத் துடைக்கிற வகையில் அவர்களுக்கு இந்த ரிபேட் முறை ஆண்டு முழுவதும் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : : தலைவர் அவர்களே, இப்போதைக்கு அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த கதர், கைத்தறி துணிகளுக்கு மத்திய அரசு ரிபேட் கொடுத்து உதவியிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த ரிபேட்டை அந்தந்த ஆண்டிலேயே மத்திய அரசுக்கு வழங்குகிறதா ? இல்லையென்றால் மாநில அரசுக்கு ரிபேட் என்ற வகையில் மையஅரசு கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தர வேண்டிய ரிபேட் தொகையை வாங்கித்தான் அவ்வப்போது தந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் உடனேயே தருவது இல்லை. கணக்குப் பார்த்து பிறகுதான் தருகிறார்கள். அப்படித் தருகிறபோது, அந்தந்த தொகைகளை நாம் கோவாப் டெக்சுக்கு அவ்வப்போது கொடுத்துவிடுகிறோம்.

கைத்தறித் துணிகள் ஏற்றுமதி

*வினா எண் 505. திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இருந்து கைத்தறித்துணிகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில் என்னென்ன ரகங்கள் ஏற்றுமதி செய்யப் படுகின்றன ?

(இ) அந்த ரகங்கள் எந்தெந்த இடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) ரியல் மெட்ராஸ் கைக்குட்டைகள், லுங்கிகள், சட்டைத்துணிகள், அலங்கார படுதா துணிகள் (Furnishing) முதலிய ரகங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

(இ) சைதாப்பேட்டை, அனகாபுத்தூர், சேலம், கரூர், குறிஞ்சிப்பாடி முதலிய இடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கைத்தறி துணிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் நம்முடைய மாநில சங்கம் தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்தி அதன் மூலமாக நெசவாளிகளுக்கு உதவி செய்கிறது. என்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில்